**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 575** **நாள்: 15.10.2026**

**சர்வதேச அளவில் அக்டோபர் மாதம் மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு மாதமாக கடைப்பிடிக்கப்பட்டு வருவதை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி அனைத்து மண்டல அளவில் "பிங்க் பல்ஸ் 2026" (PINK PULSE 2026) என்ற தலைப்பில் மார்பக புற்றுநோய் விழிப்புணர்விற்கான கருத்தரங்கம் இணையவழியில் இன்று நடைபெற்றது.**

சர்வதேச அளவில் அக்டோபர் மாதம் மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு மாதமாக கடைப்பிடிக்கப்பட்டு வருவதை முன்னிட்டு, இன்று (15.10.2026) சென்னை தமிழ்நாடு அரசு பன்னாட்டு உயர் சிறப்பு மருத்துவமனையின் (TNGMSSH) கதிர்வீச்சு புற்றுநோயியல் துறையின் சார்பில், பெருநகர சென்னை மாநகராட்சி அனைத்து மண்டல அளவில் "பிங்க் பல்ஸ் 2026" (PINK PULSE 2026) என்ற தலைப்பில் மார்பக புற்றுநோய் விழிப்புணர்விற்கான கருத்தரங்கம் இணையவழியில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் மார்பகப் புற்றுநோய் குறித்த புரிதல், அறிகுறிகள், பரிசோதனையின் முக்கியத்துவம் மற்றும் சிகிச்சை தொடர்பான விழிப்புணர்வு, பொதுமக்களிடையே "அறிவோம். பரிசோதிப்போம். கேட்போம். செயல்படுவோம்" (Know. Check. Ask. Act.) என்ற விழிப்புணர்வு ஏற்படுத்துதல் தொடர்பாகவும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், மார்பகப் புற்றுநோய் பற்றிய புரிதல் மற்றும் அதன் அபாய காரணிகள், மார்பகம் மற்றும் காம்புகளில் ஏற்படும் முக்கிய மாற்றங்களைக் கண்டறிதல், மார்பக விழிப்புணர்வு மற்றும் எப்போது மருத்துவ ஆலோசனையைப் பெற வேண்டும் என்பன பற்றிய தகவல்கள், வயது மற்றும் அபாய நிலைக்கு ஏற்ப மேற்கொள்ள வேண்டிய மருத்துவப் பரிசோதனைகள் (Screening Information), மூடநம்பிக்கைகளும் உண்மைகளும் – மார்பக புற்றுநோய் பற்றிய தவறான கருத்துகளைத் தெளிவுபடுத்துதல், மார்பகப் புற்றுநோய் சிகிச்சை முறைகள் மற்றும் பயணத்தைப் புரிந்து கொள்ளுதல் குறித்து விளக்கப்பட்டது.

இக்கருத்தரங்கில், மாநகர மருத்துவ அலுவலர், மாநகர நல அலுவலர், 1 முதல் 15 வரையிலான மண்டலங்களைச் சார்ந்த மண்டல மருத்துவ அலுவலர்கள், தாய் மற்றும் சேய் நல அலுவலர்கள், செவிலியர்கள், வட்டார சுகாதார செவிலியர்கள், நகர்ப்புற சுகாதார செவிலியர்கள், கிராம சுகாதார செவிலியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள்தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**